ஸ்ரீ:

திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

இயற்றிய

# நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி

## சோழநாட்டுத்திருப்பதிகள் --40

### 1. திருவரங்கம் பெரிய கோயில்

ஸ்ரீரங்கநாதன் --ஸ்ரீரங்கநாச்சியார்

சீர்வந்த வுந்தித் திசைமுகனாலல்லாதென்
சோர்வந்த சொல்லிற் சுருங்குமோ --வார்வ
மொரு வரங்கங் கோயிலுகந்தவரை யாள்வான்
திருவரங்கங் கோயிற்சிறப்பு.

### 2. திருநறையூர்

அழகியமணவாளன் --வாஸலக்ஷ்மி

சிறப்புடைய செல்வத்திருப்பதிகள் போல
மறப்புடைய நாயேன் மனத்து --ளுறப்போந்
தறந்தையா நின்றவரங்கா திருவா
முறந்தையா யிங்குறைந்ததோது.

### 3.தஞ்சை மாமணிகோயில்
(தஞ்சை வெண்ணாற்றங்கரை)

நீலமேகப்பெருமாள் --செங்கமலவல்லி

ஓதகேணெஞ்சே யுனக்குமிது நன் றெனக்கு
மேதக்க நன்மையினி வேறில்லை -- போதப்
பெருந்தஞ்சை மாமணியைப் பேணிவடிவம்
பொருந்தஞ்சை மாமணியைப் போற்று.

### 4. திருவன்பில்

திருவடிவழகிய நம்பி --அழகியவல்லி நாச்சியர்

போற்றி செயவோர் குடைக்கீழ்ப் பொன்னாடுமிந்நாடு
நாற்றிசையுமாண்டா லுநன்கில்லை -- தோற்றமிலா
வெந்தையன் பிலாதியிணைத் தாமரையடிக்கே
சிந்தை யன்பிலா தார்சிலர்.

5.திருக்கரம்பனூர்(உத்தமர்கோவில்)

புருஷோத்தமன் - பூர்வாதேவி

சிலமாதவஞ் செய்தும் தீவேள்வி வேட்டும்
பலமா நதியிற் படிந்து --மூலகிற்
பரம்ப நூல்கற்றும் பயனில்லை நெஞ்சே
கரம்பனூருத்தமன் பேர்கல்.

6.திருவெள்ளறை

புண்டரீகாக்ஷன் --பங்கயச்செல்வி

கல்லிருந்தான் றந்தை கமலத்தோனக் கமலத்
தில்லிருந்தான் றந்தையரங்கேசனென்றே--தொல்லைமறை
யுள்ளறையா நின்றமை யாலுள்ளமே கள்ளமின்றி
வெள்ளறை யான்றாளே விரும்பு.

7.திருப்புள்ளம்பூதங்குடி

வல்லிராமன் -பொற்றாமரையாள்

விரும்பினவை யெய்தும் வினையனைத்துந்தீரு
மரும்பரம வீடுமடைவீர் -பெரும்பொறிகொள்
கள்ளம்பூ தங்குடிகொள் காயமுடையீ ரடிகள்
புள்ளம் பூதங்குடியிற் போம்.

8. திருப்பேர்நகர்
அப்பக்குடத்தான் --கமலவல்லித்தாயார்

போமானை யெய்து பொருமானைக் கொம்பு பறித்
தாமானை மேய்த்துவந்த வம்மானைத் -தாமச்
செழுந்திருப்பேரானைச் சிறுகாலை சிந்தித்
தெழுந்திருப் போற்குண்டோ விடர்.

9. திருஆதனூர்
ஆண்டளக்குமையன் --ஸ்ரீரங்கநாச்சியார்.

இடரான வாக்கை யிருக்க முயலார்
மடவர் மயக்கின் மயங்கார்--கடவுளர்க்கு
நாதனூரா தரியார் நானென தென்னாரமல
நாதனூரெந்தை யடியார்.

10. திருவழுந்தூர்
ஆமருவியப்பன் --செங்கமலவல்லித்தாயார்

அடியாராய் வாழ்மி னறிவிலாப் பேய்காள்
செடியார் வினையனைத் துந்தீரு---முடிவிற்
செழுந் தூரத் தன்னெனினுஞ் செங்கண்மாலெங்க
ளழுந்தூரத் தன்னணியனாம்.